## DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

| | |
|---|---|
| Case No: | **SPL.CC.No.26/2025** |
| Prosecution Witness : | **LW - 13 / PW - 7** |
| Name : திலகவதி | Taluk : |
| S/o. : | Age : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **06.07.2026**

(எதிரிகள் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் அறங்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் 08.08.2016 முதல் தற்போது வரை தலைமை ஆசிரியராக பணிபுரிகிறேன். என்னுடைய பணி என்ன என்றால் எனது கீழ் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு பணி ஒதுக்கீடு செய்தல் மற்றும் விடுமறை அளித்தல் ஆகியன ஆகும். தர்மலிங்கம் என்பவரை எனக்கு தெரியும், அவர் எங்கள் பள்ளியில் 02.06.2010 முதல் கணித பட்டதாரி ஆசிரியராக பணிபுரிந்து வந்தார். மேற்சொன்ன தர்மலிங்கம் 07.02.2020 அன்று தற்செயல் விடுப்பு கோரி மனு செய்திருந்தார். அந்த வருகை பதிவேட்டின் உண்மை நகல் **அ.த.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆசிரியர்களின் தற்செயல் விடுப்பு விண்ணப்பம் மற்றும் அதற்கான பதிவேடு அசல் **அ.த.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கு சம்மந்தமாக ஊழல் தடுப்பு கண்காணிப்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1, 2 ம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**புகார்தாரர் தர்மலிங்கம் 01.02.2020 முதல் 06.02.2020 வரை அவர் பள்ளியில் பணியில் இருந்தாரா என்றால் இருந்தார். விடுப்பு எதுவும் மேற்சொன்ன தேதிகளில் எடுத்தாரா என்றால் இல்லை.**

**<u>மறு விசாரணை–</u>**இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.